# ஏப்ரல் - 15- புனித சனி

**ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு - மாலைத் திருப்பலிவழிபாடுகள்**
**ஆண்டவரது வலக்கை உயர்ந்தோங்கி உள்ளது: ஆண்டவரது வலக்கை வலிமையாய்ச் செயலாற்றியுள்ளது. திபா. 118:16**

## முதல் வாசகம்: தொடக்க நூல் 1:1.26-31

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது,கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார்.கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.அப்பொழுது கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன் இவை உங்களுக்கு உணவாகட்டும்.எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங் களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது. விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின.மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

**பதில்பாடல் :** அல்லேலூயா…..அல்லேலூயா…..அல்லேலூயா

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 6: 3-11

சகோதர சகோதரிகளே! திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா?இறந்த கிறிஸ்துவை மாட்சி மிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்.நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். இது நமக்குத் தெரியும். ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டனர் அன்றோ?கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை. இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார் இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம். அவர் இறந்தார் பாவத்தை ஒழிக்க ஒரே ஒருமுறை இறந்தார். இப்போது அவர் வாழ்கிறார் அவர் கடவுளுக்காகவே வாழ்கிறார். அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.

## நற்செய்தி : மத்தேயு 28 : 1 – 10

ஓய்வுநாளுக்குப்பின் வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் மகதலா மரியாவும் வேறொரு மரியாவும் கல்லறையைப் பார்க்கச் சென்றார்கள்.திடீரென ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆண்டவரின் தூதர் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்து கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டி அதன் மேல் உட்கார்ந்தார். அவருடைய தோற்றம் மின்னல் போன்றும் அவருடைய ஆடை உறைபனி வெண்மை போன்றும் இருந்தது.அவரைக் கண்ட அச்சத்தால் காவல் வீரர் நடுக்கமுற்றுச் செத்தவர் போலாயினர். அப்பொழுது வானதூதர் அப்பெண்களைப் பார்த்து, "நீங்கள் அஞ்சாதீர்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும்.அவர் இங்கே இல்லை அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்.நீங்கள் விரைந்து சென்று, "இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" எனச் சீடருக்குக் கூறுங்கள். உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறார். அங்கே நீங்கள் அவரைக் காண்பீர்கள். இப்பொழுதே நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன்" என்றார்.அவர்களும் கல்லறையைவிட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள்.திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி அவர் காலடிகளைப பற்றிக் கொண்டு பணிந்து நின்றார்கள்.அப்பொழுது இயேசு அவர்களிடம், "அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்றார்.

**தியானம்:** திருவிழிப்பு நாளான இன்று இயேசுவின் உயிப்பு நிகழிச்சிகளை ஆழமாகத் தியானிக்கவும் அதனை மகிழ்ந்து கொண்டாடவும் தாய்த்திருச்சபை எங்களை அழைத்து நிற்கின்றது. இன்றைய நள்ளிரவு வழிபாட்டை நாம் “பாஸ்கா திருவிழிப்பு” என அழைக்கின்றோம். பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என்பது பொருள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற செங்கடலை கடந்து வந்தார்கள். கடவுள் அவர்களை அடிமை வாழ்விலிருந்து விடுதலை வாழ்வை நோக்கி கடந்து செல்லும் படியாக மோசே வழியாக பல வல்ல செயல்களை ஆற்றி அவர்களை வழிநடத்தினார். ஆனால் இன்று நாம் கொண்டாடும் பாஸ்காவோ சாவிலிருந்து வாழ்விற்கும், பாவ வழிகளிலிருந்து கடவுளின் வழிக்கும் எம்மை வழிநடத்திச் செல்கின்ற விழாவாக அமைந்துள்ளது. ஏனென்றால் அவர் இறந்தோரின் கடவுள் அல்ல மாறாக வாழ்வோரின் கடவுள். இறைமகன் இயேசுவின் இறப்பில் நாமும் பங்குபெற வேண்டும் என்பது நாம் பெற்றக் கொண்ட திருமுழுக்கின் அழைப்பு. நமது பாவங்களுக்காக நாம் இறந்து கிறிஸ்துவோடு புதைக்கப்பட வேண்டும் என்று புனித பவுல் அடியார் நமக்கு கற்பிக்கின்றார். நமது பாவ நாட்டங்களை விட்டு வெளியேறுதல் என்பது அவ்வளவு எளிதான காரியமன்று, அதற்காக எமது வாழ்நாள் முழுவதும் நாம் போராட வேண்டியுள்ளது. அதற்காகவே இன்றைய திருவிழிப்பு வழிபாட்டில் ஞானஸ்நான வாக்குத்தத்தம் புதிப்பிக்கப்பட்டு, புனித மனிதர்களாக மாற்றம் பெற நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். எனவேதான் நம் பாவங்களுக்காக உயிர்த்த கிறிஸ்துவோடு புதுவாழ்வுக்கு உயிர்தவர்கள் என்ற நம்பிக்கையுடன் அவர் உலகிற்கு கொண்டுவந்த சமாதானத்தை சுவைத்து புதுவாழ்வு வாழ்வோமாக. அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!